**மாலிம்பட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மாலிம்பட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு நெறிமுறை அடிப்படையிலான அபிவிருத்தி உதவியின் கீழ் தெலிஜ்ஜவில பொது நூலகம் நிர்மாணித்தல் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 581,747 இற்கான செலவு ஒன்றினை மீளாய்வாண்டிற்கான மூலதன செலவு ஒன்று என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | புவக்தொல நீர் செயற்திட்டத்தின் அபிவிருத்திக்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 998,600 தொகை நிர்மாண வேலை கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை யால் கூட்டுத்தொகை ரூபா 197,461,065 தொகைக்கான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணிகைகள் மற்றும் கட்டி டங்கள் கணிப்பீடு 2019 ஆண்டின் போது மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் 42 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தினால் திருத்த ப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் | 2007 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை சபை ஊழியர் ஒருவருக்காக ஊழியர் சேமலாப நிதியத் திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 172,440 செலவு வைத்திருக் காததுடன் ஊழியர் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய 8 சதவீதம் ஆகிய ரூபா 68,976 இற்கான பங்களிப்புத் தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தியிருந்தது. | சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 1860 ஆம் இலக்க விஷேட சபை தீர்மானத் தின் பிரகாரம் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 150(4) | சபைக்கு உரிய வருமான ங்களை அறவீடு செய்வத ற்காக சபை செயலாள ரின் கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வருமானங்களை சேகரிப்பதற்காக எதிர்வரும் காலங் களில் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,884,732 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,520,472 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,569,000 | 1,184,082 | 1,209,492 | 107,689 | 1,449,000 | 1,261,776 | 1,212,235 | 133,099 |
| வாடகை | 6,547,600 | 1,922,145 | 1,745,537 | 272,336 | 2,963,600 | 1,676,617 | 1,674,117 | 95,728 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 639,500 | 786,642 | 787,442 | 16,000 | 632,000 | 457,734 | 457,734 | 16,800 |
| ஏனைய வருமானங்கள் | 24,889,800 | 21,811,557 | 11,496,947 | 49,572,654 | 18,509,700 | 20,898,757 | 9,554,261 | 39,258,044 |
| மொத்தம் | 33,645,900 | 25,704,426 | 15,239,418 | 49,968,679 | 23,554,300 | 24,294,884 | 12,898,447 | 39,503,671 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 33,645,900 தொகை யாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 39,503,671 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 25,704,426 தொகை உடன் ரூபா 65,208,097 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 15,239,418 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 49,968,679 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் போது ஆரம்ப நிலுவை ரூபா 123,732 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 148,738 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 272,470 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 180,229 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 92,241 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. | நிலுவை வீதவரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீதியான நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி ரூபா 11,729 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 4,502 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 16,231 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,364 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 14,867 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. ஆரம்ப நிலுவையில் 4.16 சதவீதம் சிட்டை யிடல்களில் 20.1 சதவீதம் ஆண்டின் போது அறவிடப்பட்டு ள்ளது. | நிலுவை ஏக்கர்வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீதியான நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலுவை வாடகை ஆரம்ப மீதி ரூபா 95,728 தொகையாகக் காணப் பட்டதுடன், ரூபா 1,712,845 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,808,573 தொகை அறவிடப்பட வேண்டியி ருந்தது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,543,462 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 265,111 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. ஆரம்ப நிலுவை மீதியில் ரூபா 19,500 தொகை ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.5 வியாபார வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிலுவை வாடகை ஆரம்ப மீதி ரூபா 16,800 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 830,600 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 847,400 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 831,400 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் ரூபா 16,000 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. ஆரம்ப நிலுவையில் இருந்து பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீதியை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதி யில் உள்ளவாறு ரூபா 1,398,511 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 48,174,143 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | விரைவாக அறவிடப்பட வேண்டும். | |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) **துணை விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் சட்டத்தின் பிரிவு 139 இன் பிரகாரம் 2014 ஆகஸ்ட் 29 திகதிய 1878 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அத்தியவசியமான சேவைகள் வழங்கல்கள் தொடர்பாக துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்த போதிலும் 2019 மே 05 வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | துணை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) **நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக் கோள் மற்றும் இலக்குகளை அளவை செய்வதற்கு சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவை செய்ய வேண்டும். | தற்போது செயற்படும் 6 கருமங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாலிம்பட அகலவத்தஹேன காணியில் தகனகூடம் நிர்மாணிப்பதற்காக உள்ளூராட்சி அமைச்சில் இருந்து 2000 ஆண்டின் போது சபைக்குச் கிடைத்திருந்த ரூபா 1,000,000 இற்கான தொகை உரிய கருமங்களுக்கு ஈடுபடுத்தாமல் ரூபா 900,000 திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீதியான ரூபா 100,000 தொகையில இருந்து தகனகூடத்தில் நிர்மாணவேலை ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகனகூடத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு எதிர்பாரக்கப்படுகின்றது. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மூன்றாம் நிலையில் மிகை பதவிக்கான அங்கீகாரம் பெறுவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேலதிக பதவியணியின் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் செயற்படுகின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற/ குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டின் போது உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ரூபா 1,800,093 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த மாலிம்பட பொதுச் சந்தையின் தரைமாடி இரண்டு வருடங்களாக செயற்படாமல் காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். | மீதியான வேலைகளை சபை நிதியத்தில் இருந்து பூர்த்தி செய்து எதிர்காலத்தில் சந்தையை நடாத்துவதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய பங்களிப்புத் தொகை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் அந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமையால் ரூபா 86,220 மிகை விதிப்பு ஒன்று விதிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 43,110 தொகை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 5.18 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் பிரகாரம் சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 செலவு விடயங்களில் சேமிப்புக் களின் கூட்டுத்தொகை ரூபா 14,264,909 தொகையாகக் காணப் பட்டதுடன் அப்பெறுமதிகள் 15.3 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை யான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளி டையே முரண்கள் குறைந்த மட்டத்தில் பேணப்படுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 05 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 9,966,892 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதிகள் 7.7 சதவீதம் முதல் 70.6 வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளி டையே முரண்கள் குறைந்த மட்டத்தில் பேணப்படுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/ 01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற் கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கை எடுப்பதற்கு முடியவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்தை பெற்றிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4.3 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 09 ஏக்கர்கள் 01 ரூட் 36 பர்சஸ் அளவுடைய 10 காணித் துண்டுகள் விளைவற்றுக் காணப்டுவதுடன் சபைக்குச் சொந்தமான 25 ஏக்கர் 18 பர்சஸ் கொண்ட 38 காணித் துண்டுகளின் எல்லைகளை அடையாளமிட்டு பாதுகாப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுகின்றேன். |
| (ஆ) | சபையினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 175,644 பெறுமதியான அச்சுக்கள் உற்பத்தி இயந்திரம் 2012 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்த வேண்டும். | ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | சபைக்குச் சொந்தமான ரூபா 7,967,144 தொகை கிரயத்தை உடைய கல் உருளை ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 1,500 வீதம் தனியார் வர்த்தக ஒருவருக்கு வாடகை கொடுத்தல் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 105,000 தொகையை சபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமாத்தை விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகை ரூபா 77,400 தொகை பிடி பணத்தில் இருந்து பதிலீடு செய்து மீதியான ரூபா 31,825 இற்கான தொகை எரிபொருள் வழங்குவதற்காக பதிலீடு செய்வதற்கு சபை தீர்மானம் எடுக்கப்பட்டது. |